DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP. No. 19/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | **திரு. சியாத்** | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொல்லம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவி மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அங்கீகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அது **எ.ம.சா.ஆ. 1** ஆகும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள KL-23-R-2631 பதிவெண் கொண்ட லாரியின் பெர்மிட் விவரங்கள் குறித்து ஆய்வுசெய்கையில் மேற்படி வாகனத்திற்கு 12.03.2020 முதல் 15.03.2021 வரை National Permit வழங்கப்பட்டுளளது என்றும் அதன் பின்னர் 02.12.2021 முதல் 15.03.2022 வரை National Permit வழங்கப்பட்டுளளது என்றும், கொல்லம் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் வழங்கிய சான்றினை நான் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் ஈடுபட்ட KA-23-R-2631 பதிவெண் கொண்ட லாரி எங்களது வட்டார போக்குவரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு எங்களது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று 11.03.2021ம் தேதி முடிந்துவிட்டது என்றால் சரிதான். விபத்து 30.04.2021ம் தேதி நடந்தது என்றால் சரிதான். விபத்தானது கொரோனா காலக்கட்டத்தில் நடந்தது என்றால் சரிதான். அந்தக்காலக்கட்டத்தில் அனைத்து வாகனங்களுக்கும் 6 மாதம் தகுதிச்சான்று அரசாணை மூலமாக நீட்டிக்கப்பட்டது என மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 15.03.2024 வரை வாகனத்திற்கு பெர்மிட் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.02.2020 முதல் 31.10.2021 வரை கொரோனா காலக்கட்டம் என்பதால் அனைத்து வாகனங்களுக்கும் ஓட்டுநர் உரிமம், தகுதிச்சான்று ஆகியவை முடிவடைந்தாலும் 31.12.2021 வரை ஊர்ஜிதத்தில் இருப்பதாக கருதப்படும் என அரசாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் பார்க்கையில் மேற்படி வாகனத்திற்கு முறையான தகுதிச்சான்று ஊர்ஜிதத்தில் இருந்ததாக கருதப்படும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi